புதுமலர் : 06 இதழ் : 05

புரட்டாதி - ஐப்பசி

# அனல்

இணை ஆசிரியர்கள்
யோ. நிக்சன்
வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் :

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

ரோமர் 12:11

சீயோன் தேவாலய பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.09.2009

## பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - உணர்வுகள்
- தாங்க முடியவில்லை - நற்செய்தி
- வாலிபர் வளாகம் - அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்
- வித்திடும் வித்தகர்கள்
- குறுக்கெழுத்துப் போட்டி - 33
- ஜெபவீடு, வல்லமையின் வீடு, துதியின்வீடு
- பக்தர்களின் பயிலகம்
- வினாவிடை - 35
- மூவரி முத்துக்கள்
- அனலின் ஆறுதலின் செய்தி - உன்னை நீ நேசிப்பதை


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும் வேதனையினாலும் குடும்பப் பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.

எழுதவேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.


மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


The Editor "Anal"
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

ஆசிரியர் "அனல்"
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

T.P. : 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்

கிருபை நிறைந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த அனல் உங்கள் கரங்களுக்கு கிடைப்பதில் மகிழ்ச்சி யடைகின்றோம். சென்ற காலங்களில் வெளிவந்த அனல் சஞ்சிகையை நீங்கள் பெற்று வாசித்து ஆசீர்வாதங்களைப் பெற்று, ஆண்டவருக்கு உங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து, அவருடைய அன்பில் நிலைத்திருப்பதற்காக, இயேசுவின் இரட்சிப்பில் நிலைத்திருக்க உங்களை விட்டுக் கொடுத்துள்ளீர்கள். தொடர்ந்து அவருடன் வாழ வேண்டிய வழியை அனல் உங்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கும். தவறாது அனல் சஞ்சிகையை பெற்று வாசித்து பயனடைவதோடு மற்றவர்களுக்கும் வாசிக்கும் படி ஒத்துழையுங்கள். உங்கள் மூலமாக கர்த்தருடைய நாமம் மகிமைப்படட்டும். "அனல்" குறித்தான உங்களது கருத்துகளையும் எமக்கு எழுதி அறியத்தாருங்கள்.

எம்முடைய நன்மையையே நோக்கமாய் கொண்ட இயேசு அதற்காகவே எல்லாவற்றையும் செய்து கொண்டு வருகின்றார். நாம் வாழவேண்டும், சுகமாகஜீவிக்க வேண்டும்,பரலோகம் வரவேண்டும் என்பதற்காகவே இயேசு தம்மை ஒப்புக் கொடுத்தார். எனவே அவரை அறியும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொண்ட சகோதரனே, சகோதரியே அந்த இயேசுவை விட்டுவிடாதே, மறந்துவிடாதே; அவர் உன்னை நேசிக்கின்றார். உன்னை நேசிக்கும் அந்த இயேசுவை நீயும் நேசிக்க தீர்மானம் எடுத்துவிடு.

ஆசிரியர்.

கதையும் கற்றதும்

# உணர்வுகள்........

அது ஓர் அதிசய தீவு. அங்கே குடியிருந்தவை மனிதர்களோ உயிரினங்களோ அல்ல. மாறாக எல்லாவிதமான உணர்வுகளும் தான் அந்தத்தீவில் சங்கமித்திருந்தன. மகிழ்ச்சி, துக்கம், தாழ்மை, பெருமை என பற்பல உணர்வுகள் அங்கே காணப்பட்டன. அவற்றுள் அன்பும் ஒன்று. ஒரு நாள் திடீரென அந்தத்தீவு கடலினுள் மூழ்கிப்போகிறது என்ற அறிவித்தல் வந்தது. பரபரப்பு அடைந்தன எல்லா உணர்வுகளும். ஒவ்வொரு உணர்வும் தனக்கென ஒரு படகை உருவாக்கி அந்தத் தீவை விட்டு வெளியேறத் தொடங்கின. அன்பைத்தவிர.

அந்தத் தீவில் தரித்திருந்தது அன்பு மட்டுமே கடைசி வினாடி வரை அங்கே இருக்க அன்பு முயன்றது. தான் வாழ்ந்த தீவை அவ்வளவு சீக்கிரத்தில் விட்டு வெளியேற அன்புக்கு முடியவில்லை. காத்திருந்தது. தீவு வெறுமையாகுவதோடு மட்டும் நின்றுவிடாது மூழ்கிக் கொண்டும் இருந்தது. அந்தத்தீவு முழுவதுமாக மூழ்கிப்போகும் நிலையை எட்டியபோது அன்பு யாரிடமாவது உதவி கேட்க முடிவெடுத்தது.

ஓர் ஆடம்பரமான படகில் செல்வம் கடந்து செல்வதை கண்ட அன்பு, ''செல்வம்! என்னையும் கூட்டிச் செல்வாயா?'' எனக்கேட்டது. ''அன்பே! என்னை மன்னித்துக் கொள் எனது படகில் நிறைய வெள்ளியும் பொன்னும் இருப்பதால் நீ ஏறிக் கொள்ள இடமில்லை'' என செல்வம் கூறியது ''சரி பரவாயில்லை!'' என்று கூறிய அன்பு அருகே பெருமை கடந்து செல்வதைக்கண்டது. ''பெருமையே! தயவு செய்து எனக்கு உதவி செய்வாயா? '' எனக் கேட்டது. ''ஐயோ! அது முடியாத காரியமாயிற்றே நீ நனைந்து அழுக்காக இருக்கிறாய். உன்னை ஏற்றினால் எனது அழகு கெட்டுவிடும். என பெருமை உரத்துக் கூறிவிட்டுச் சென்றது. துக்கம் அருகே வந்தது. "துக்கமே! என்னையும் கூட்டிச்செல்"என அன்பு கூறியது. ஆனால் துக்கத்துக்கோ எதுவும் கேட்கவில்லை. அன்பின் குரல் அதன் செவியை எட்டவே இல்லை. அப்படியே சோகம் மேலிட கடந்து சென்றது. இவ்வாறாக அன்பு உதவி கேட்டுக் கேட்டு ஏமாற்றம் அடைந்தது. திடீரென, ''அன்பே! என்னோடு வா. உன்னை அழைத்துச் செல்கிறேன்'' என ஒரு குரல் கேட்டது. மிகவும் களிப்புடன் அப்படகில் ஏறிக் கொண்டது அன்பு. ஒரு பாதுகாப்பான இடத்தை அடைந்ததும் அன்பு நிம்மதியுடன் சுற்றும் முற்றும் பார்த்தபோது அறிவைக்கண்டது. உடனே அன்பு அறிவிடம் ''எனக்கு உதவி செய்தது யார் எனக்கூற முடியுமா? இந்த செயலை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்'' என்றது அதற்கு அறிவு சிரித்துவிட்டு ''உனக்கு உதவியது வேறு யாருமில்லை! தனிமைதான்'' என்றது '' ஏனெனில் தனிமைக்கு மட்டுமே அன்பின் பெறுமதி தெரியும்'' என்னும் அர்த்தம் கூறியது அறிவு.

ஆம்! இது எவ்வளவு உண்மையானது! இந்த உலகத்தில் எத்தனையோ பேர் தனிமை உணர்வோடு போராடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு தேவை ஓர் அன்பின் வார்த்தை! ஓர் அன்பின் செயல் மட்டுமே! உன்னைப் போல் உன் பிறனையும் நேசி என்று கூறிய எம் தேவனும் எம்மிடம் அதையே எதிர்பார்க்கிறார். யாருமின்றி தனித்தவர்களாய் இந்த அவனியிலே அங்கலாய்ப்போருக்கு இயேசுவின் அன்பை எடுத்துக் கூறுவோம். எம் அன்பின் வார்த்தைகளையும் அரவணைப்பையும் அவர்களுக்கு கொடுப்போம். அப்போது அவர்களுடைய வாழ்வு ஒளிபெறும்

"அன்பான ஒரு வார்த்தை போதும் ஓர் வாழ்வை மாற்ற..."

கெ. இன்பரூபன்

# தாங்க முடியவில்லையே




இன்று எமது வாழ்வில் ஏற்படும் பல அனுபவங்கள், துன்பம், துயரம், வேதனை, இறப்பு இதில் சிலவற்றை மறந்து விடுகின்றோம். சில மறக்க முடியவில்லை, தாங்கி கொள்ளவும் முடியவில்லை. இவை எமது மனதை கலங்கப்பண்ணி, இதயமே வெடித்து விடும் நிலை போல் உள்ளது. சிந்தித்து பார்க்கையில், இதயத்தில் அழுத்தம் அதிகரிக்கின்றது. வலி பெருகுகிறது. கண்களும் வறண்டு போய் விடுகின்றது.

இதை வாசிக்கும் போது இந்த நிலமையில் நீங்கள் இருக்கின்றீர்கள், திடீர் விபத்து, வேலை போய்விட்டது, கிட்டி வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு கை நழுவி விட்டது,, எனக்கு கரு உண்டாகி இருக்கின்றது என்ற மகிழ்ச்சி, திடீர் என கரு சிதைவுற்று விட்டது, எதிர்பாராத வேளையில் பிள்ளையின் வியாதி, என்னை காப்பாற்றுவாள் என நினைத்த தாயின் திடீர் மரணம், Exam Result படு தோல்வி பாதியில் நின்ற திருமணம் ........ இப்படி எத்தனையோ. தாங்க முடியவில்லை தலை சுற்றுகின்றது, பதில் தெரியவில்லை, அழவும் பெலன் இல்லை எனக்கு யார் உதவி செய்ய முடியும்.

எனக்கு பிரியமானவரே! தயவு செய்து சில நிமிடம் தொடர்ந்து வாசியுங்கள் எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு, பதிலும் உண்டு. வேதாகமத்தை நாம் ஏற்றுக் கொள்வதில் தான் இறுதி முடிவு கிட்டும்.

யோபு என்ற பக்தன் இருந்தான்; நல்ல மனைவி, பிள்ளைகள், சொத்து, சுகம், தெய்வபயம், தெய்வ வழிபாடு அனைத்தும் இருந்தது. ஒரு நாள் திடீர் என தன் பிள்ளைகள் அனைவரும் மரித்து போனார்கள். சொத்துக்கள் களவு போனது. கட்டிய மனைவி தேவனை தூசித்து செத்து போ..... என்றாள். இப்படி யாவும் இழந்த நிலையில் தனி மனிதனான யோபு நின்றான். தாங்க முடியவில்லையே........ என கதறியபோது பல கேள்விகள் எழும்பியது. அவனைச் சில நண்பர்கள் ஆதரவு தருவதாக பல கேள்விகள் கேட்டு, சத்திரசிகிச்சை அல்ல, பிரேதப்பரிசோதனை போல் யோபுவை கீறி கிழித்து தவறு எங்கே என்று தேடினார்கள். பதில் கிடைக்கவில்லை.

யோபு தாங்கமுடியவில்லையே என்றார். வேதத்தில் இன்னேரு இடத்தில் லூக்கா நற்செய்தி நூலில் ஒரு கைம்பெண் இருந்தாள். அவளின் சொத்து சுகம் எல்லாம் ஒரே செல்வ மகன்..... திடீர் என ஒருநாள் அவன் மரித்துவிட்டான். இப் பெண்ணுக்கு இனி ஏதும் இல்லை, அவனை புதைப்பதற்கு ஊரார் எடுத்து செல்கின்றார்கள் அவளால் தாங்க முடியவில்லையே. என்று கதறினாள்.

அவ்வாறு ஒரு தடவை தாவீது என்னும் அரசனும் அவன் படையும் யுத்தம் செய்து விட்டு திரும்பி வந்த போது சிக்லாக் என்னும் இடத்தில் அவனது மனைவியும் மற்றோரின் மனைவி, பிள்ளைகள், சொத்துக்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டு

கடத்தப்பட்டு போய்விட்டார்கள். தாவீதைபார்த்து அவன் நண்பர்கள் அவனை கல்லால் அடிக்க முற்பட்டார்கள். தாவீது என்ன செய்வது என்று தெரியாது........ தாங்க முடியவில்லையே என்று கதறினான்.


இவ்வாறு நீயும் கதறுவது, உள்ளத்தில் உன்னையே காயப்படுத்துவது யாவும் அறிகின்றேன். உன்னைப் போலவே நானும் ஒரு சக மனிதனே. ஆனால் உன்னுடன் சில வார்த்தைகள் பகிர விரும்புகின்றேன். தாங்கமுடியவில்லையே என்று கதறிய அனுபவம் எனக் குண்டு அந்த நாளில் கேட்டேன். எனது அவல நிலமை எனக்கு புரிந்தது: இயேசு கிறிஸ்து எனக்காகவே பூமிக்கு வந்தார் என்ற உணர்வு எனக்குள் தோன்றியது. அவரிடம் எனது அவல நிலமையை கூறினேன். அவர் என்னை ஏற்றுக் கொண்டார்; மட்டும் அன்றி என்னால் தாங்கமுடியவில்லையே...... என்ற கதறலையும் அவரே ஏற்றுக்கொண்டார். ஏசாயா 53:4 இல் மெய்யாகவே நமது பாடுகள் நமது துக்கங்களை ஏற்றுக்கொண்டார். நமக்கு சமாதானம் உண்டு பண்ணும்படி அவர் பாடுகள் பட்டார். அவருடைய தழும்புகளால் நாம் குணமடைகின்றோம். ஆறுதல் அடைகின்றோம். தாங்கமுடியவில்லையே என்ற யோபுவின் வாழ்வின் முடிவு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. அவன் இரண்டு மடங்கு ஆசீர்வாதம் பெற்றான்.

தன் மகனை இழந்த கைம்பெண்ணையும் இயேசு சந்தித்து மகனை உயிருடன் எழுப்பினார். அவள் ஆறுதல் பெற்றாள். தாவீதும் யாவரையும் இழந்தாலும் கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்தியதால் இழந்த அனைத்தையும் பெற்றுக் கொண்டான். ஆறுதல் அடைந்தான். இன்று வேதம் கூறும் சத்திய ஆறுதல் வார்த்தைகள் இவற்றையும் நாம் ஏற்றுக் கொள்ள தடையாக இருப்பது எமது அறிவு பூர்வமான எண்ணங்களே, மனிதனின் வார்த்தைகளே: நாம் வானத்தையும் பூமியையும் உண்டு பண்ணிய தேவனை பூரணமாக ஏற்றுக் கொண்டு எமது பாவத்தையும், அவல நிலமையையும் அவருக்கு அறிக்கையிடும் போது தேவன் நிச்சயமாகவே எமக்கு பூரணமான விடுதலை தருவார். எமது பாடுகள், துக்கம், பாவம், வியாதி, இயலாமை யாவற்றையும் அவரே ஏற்றுக் கொண்டு உனக்கு ஆறுதல் தர வல்லவர். நீயும் இயேசுவே இயேசுவே என்று அழைத்துப்பார். உன் நிலமை மாறும் உண்மையாக இயேசுவை ஏற்றுக் கொண்ட ஒருவருடன் உன் உறவை உண்டு பண்ணு. தேவனுடைய ஆலயம் செல். அவர் உன்னை ஆதரிப்பார். உன் அலறுதல் ஆனந்த கீதமாக மாறும். உன் பாடுகள் பரவசமாய் மாறும். இன்றும் உன்னை தன் பிள்ளையாக ஏற்று உனக்காக யாவையும் செய்து முடிக்க ஆவலாய் இருக்கிறார். இயேசு உன்னை அழைக்கின்றார். எதையும் தாங்கும் இதயம் தருவார். அவரே எல்லாம் ஆவார். உனக்கு என்னுடன் நேரம் செலவு செய்ததற்கு நன்றி. உங்களிடம் ஏற்பட்ட மாற்றம் அறியவும் உங்களுடன் ஜெபிக்கவும் நானும் என் சக நண்பர்களும் ஆயத்தமாக இருக்கின்றோம் எனவே கடிதம் எழுதவும்.

போல் - கிசோ

**குறுக்கெழுத்துப் போட்டி 32 சரியான பதில்கள் எழுதியவர்கள்**

1. S. மனோகரி - நீர்வேலி
2. சி. ஜெபிறறா - மயிலங்காடு




# அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்

## *And Few there be that Find it*

**கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்**

நாளுக்கு நாள் உலகம் பலவிதமான கண்டுபிடிப்புகளிலும், மனித அறிவின் உச்ச நிலையை எட்டியிருக்கும் வேளையிலே பல புதிய புதிய ஆய்வுகளையும் அதில் வெற்றியும் கண்டு வருகின்றான்.

நவீனமயமாக்கப்பட்ட உலகில் மனிதன் தனது தேவைகள் அனைத்தையும் தான் இருக்கும் இடத்தில் இருந்தே பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

வாலிபத்தின் வலிமையும் அதன் செயல்களும் தான் விரும்புகின்றதை அடைந்து விடவே வேண்டும். என்னும் நோக்கோடு முழுமூச்சாக செயலாற்றும் துடிப்புள்ள பருவமாகும். மிகவும் முக்கியமான உன்வாழ்விற்கு இன்றியமையாத ஓர் காரியத்தை இதுவரையிலும்தேட ஆரம்பித்து விட்டாயா? கண்டுபிடித்து விட்டாயா? **ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது அதை கண்டு பிடிப்பவர்கள் சிலர் (மத்தேயு 7:14)**

நீ வாழும் இந்த உலகத்திலே அறிவிலே செல்வாக்கிலே, பணத்திலே கல்வியிலே சிறந்த அனேகர் இதற்கு இன்னமும் விதிவிலக்காகவே இருக்கின்றனர். அவர்களது தேடுதல் எல்லாம் இவ்வுலகத்திற்கு உரியதாகவே காணப்படுகின்றது.

நீ ஆயத்தமா? ஜீவனுக்குப் போக (பரலோகராஜ்யத்துக்கு)
நீ ஆயத்தமா? இடுக்கமான வாசல்வழி செல்ல
நீ ஆயத்தமா? நெருக்கத்தில் வாழ (உலக வாழ்வுக்கு உன்னை விலக்கி, உலக சினேகத்துக்கு ஒத்த வேசம் போடாமல் வாழ)

- இளம் பிராயத்தில் இடுக்கம், நெருக்கம் இவற்றை இன்னும் ஒருவர் எங்கள்

மேல் அதிகம் செலுத்தவோ அல்லது இன்னும் ஒருவருக்கு நாம் அடங்கிப் போவதோ கஸ்ரமான காரியமாக தோன்றினாலும் கூட நீ தேவனுடைய வார்த்தைக்கு மெய்யாகவும், முழுமையாகவும் கீழ்ப்படிவாயானால் அவை உனக்கு மிகவும இலகுவாகும்.

**இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்.**

அழிவுக்குப் போகிற வாசல் விசாலமும் வழி அகலமுமாய் இருக்கிறது. அந்த பாதையிலே பிரவேசிக்கிறவர்கள் அனேகர்.

எல்லா வாலிபர்களும் அந்த காரியத்தை செய்கிறார்களே ஏன் நான் மட்டும் செய்யக் கூடாது?

❋ மற்ற திருச்சபையிலே வாலிபர்கள் இப்படி செய்கிறார்களே?
❋ ஏன் எங்கள் வீட்டில் மட்டும் இதை செய்வதில்லை?
❋ எனக்குத்தான் எப்பொழுதும் கட்டுப்பாடு
❋ எல்லாரும் செய்வதை செய்யாமல் இருந்து நீ மட்டும் தான் பரலோகம் போகப் போகிறாய்?
❋ இந்த விஷயம் சாதாரணமானது.
❋ இதை செய்வதற்கு யாரையும் கேட்க தேவையில்லை?
❋ எனக்கு சுயாதீனம் இல்லையா?

இவ்வாறான வினாக்கள் உன் இதயத்தில் எழும் போது சகோதரனே (தரியே) உன் பதில் என்னவாகஅமைகின்றது. சற்று யோசித்துப்பார் இடுக்கமான வாசல்வழி உட்பிரவேசிப்பதற்கு உனக்கு உன்னதருடைய பெலன் இன்றியமையாதது. வேதாகமத்தை ஒழுங்காக தினம் தோறும் வாசி, ஜெபத்திலே தரித்திரு விசாலமான, அகலமான பாதைக்கு விலகியிரு.

**இடுக்கமான வாசலை கண்டு கொண்டு தங்கள் உயிரையும் இயேசுவுக்காய் இழக்க துணிந்தவர்களின் உண்மை கதை**
"கிறிஸ்தவர்களைக் காட்டிக் கொடுத்த துரோகியின் மகன் என்ற அநியாயமான பெயர் எனக்கு வேண்டாம் அப்பா"பாஸ்ரர் புளோரெஸ்கோ – இயேசுவை அறிவித்தஒரே காரணத்துக்காக சிறை சென்றவர்.

1960 ம் ஆண்டு பாஸ்டர் புளோரெஸ்கோ ரோமானியாவில் "இயேசுவே மெய்யான தேவன்" என்று அறிவித்த ஒரே காரணத்துக்காக கம்யூனிஸ் தீவிரவாதிகள் அவரை கொடூரமாக தாக்கி பயங்கர இரத்தக் காயங்களுடன் சிறையில் அடைத்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் மீண்டும் மீண்டும் சிறைக்கு வந்து அவரைத்தாக்கி இம்சித்து "உன்னோடு சேர்ந்து இயேசுவை வழிபடும் யார் இருக் கிறார் கள்? அவர் களுடைய பெயரைச் சொல் எனபலவகையில் கொடுமைப் படுத்தினர். எதைக் கேட்டாலும் எந்த பதிலையும் சொல்லாமல் அமைதியாகவே இருந்து சாதித்தார். தீவிர வாதிகளுக்கு அது

ஒரு சவாலாக மாறிவிட்டது. பழுக்க காய்ச்சிய இரும்புகம்பியுடன் தீவிரவாதிகள் சிறை அறைக்குள் நுளைந்தனர். புளோரெஸ்கோவுக்கு சிவப்பும் மஞ்சலும் கலந்த நிறத்தில் தகதகஎன அக்கினியைக் கக்கிக் கொண்டு இருக்கும் கம்பியின் கொடிய காட்சி அச்சத்தை உருவாக்கிற்று. ''இது என் நொந்து போன சரீரத்தில் படுமானால் என்நிலை என்னவாகும்'' என்ற பயம் ஒரு பக்கமும் ''கர்த்தர் பெரியவர் அவர் எனக்கு நலமானதைச் செய்வார்'' என்ற உறுதி ஒருபக்கம். அச்சத்தின் மத்தியிலும் உறுதியே மேலோங்கி நின்றது. அவர்கள் கேட்ட எந்த கேள்விக்கும் பதிலையும் கூற மறுத்துவிட்டார். பழுக்க காய்ச்சிய கம்பி அவரது உடலில் பல இடங்களில் பாய்ந்து தன்னிலுள்ள அக்கினியின் உக்கிரத்தைத் தீர்த்துக் கொண்டது. மயங்கி விழுந்த நிலையில் விட்டு விட்டுச் சென்றனர்.

பல நாட்கள் பட்டினிபோட்ட அநேக எலிகளை அவரின் அறையில் விட்டனர். 2 வாரங்கள் இரவும் பகலும் அவரைதூங்க விடவில்லை; தூங்கினால் எலிகள் தாக்கிவிடும் உட்காரக்கூட முடியாமல் வலிப்போடு இருந்து அவற்றை விரட்டிக் கொண்டே நின்றார். இந்த நிலையில் அவ்வப் போது வந்து அவரை கேள்வி கேட்டார்கள். அவர் மௌனமே சாதித்தார். தன்னோடுள்ள கிறிஸ்தவ சகோதரர் களைக் காட்டிக் கொடுக்கவே இல்லை. அதில் உறுதியான வைராக்கிய மாயிருந்தார்.

கடைசியாக, கம்யூனிஸ்ட் தீவிரவாதிகள் புளோரெஸ் கோவின் 14 வயது மகனை கொண்டு வந்தனர். அவருக்கு முன்பாக ஒன்றும் அறியாத அவனை அடித்து சித்திரவதை செய்தனர். புளோரெஸ்கோவிற்கு இதைத்தாங்கி கொள்ள முடியாமல் துடிதுடித்துப் போனார். பாஸ்ரரின் உறுதி அசைய ஆரம்பித்தது. ''அலெக்சாண்டர்'' என் மகனே உன்மேல் விழும் அடிகளை என்னால் தாங்க முடியவில்லை. அவர்கள் விரும்புகிற தகவல்களை நான் சொல்லித்தான் ஆகவேண்டுமோ? என்னால் இதை சகிக்க முடியவே இல்லையே என்று கதறினான்.

''அப்பா என்னை கொன்றாலும் அதை தாங்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களைப்பற்றி சொல்லாது இருங்கள். ''**கிறிஸ்தவர்களைக் காட்டிக் கொடுத்த துரோகியின் மகன் என்ற அநியாயமான பெயர் எனக்கு வேண்டாம் அப்பா**'' என்று தைரியமாக பதிலுரைத்தான் ''என்மகனே'' என்று கதறினான். அப்பா நான் செத்தாலும் இயேசுவின் பெயரை உச்சரித்துக் கொண்டே சாவேன். நீங்கள் பயப்பட வேண்டாம். என தைரியம் சொன்னான்.

எதையோ எதிர்பார்த்து மகனைக் கொண்டுவர அது வேறுவகையில் திரும்பிவிட்டதே என கடும் கோபத்தில் அவனைத்தாக்கினார்கள். அவன்சிந்திய இரத்தம் சிறைச்சுவரெல்லாம் தெறித்தது. இயேசுவை துதித்துக் கொண்டே ஜீவனை விட்டான்.

அலெக்சாண்டர் என் மகனே நீ எனக்கு முந்திக் கொண்டாய்; நீ இயேசுவோடு இருப்பாய். நானும் வந்து உன்னைக் காண்பேன் என்றார். இரத்த சாட்சிகளின் ஒரு சொட்டு இரத்தமும் கூட வீண் போகவில்லை; அவையாவும் ஜீவனுள்ள வித்துக்கள் அவைகள் முளைத் தெழும்பும்..... (இரத்தம் சிந்த துணிந்தவர்கள் என்னும் நூலில் இருந்து)

**யோவான் அப்போஸ்தலன்** - கொடிய துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டு கி.பி 97ல் ரோமப்பேரரசரால் நாடுகடத்தப்பட்டவன்.

அப்போஸ்தலராகிய பவுல் - கி.பி 65ம் ஆண்டு ரோம் நகரில் இரத்த சாட்சியாக மரித்தவர்.

டாம் ஒயிட் - ''இரத்த சாட்சிகள் சத்தம்'' என்ற இயக்கத்தின் இயக்குனர். கிறிஸ்தவ நற்செய்தி கைப்பிரதிகளை விநியோகித்ததுக்காக 17 மாதங்கள் கியுபா நாட்டின் சிறையில் கொடிய துன்பங்களை அனுபவித்தார். (1979)

**மைக்கேல் நாகஷிமா** - சித்திரவதை செய்யப்பட்டு மரணம் சம்பவிக்கும் வரை தலையிலிருந்து முழுச்சரீரமும் கொதிக்கும் நீரை ஊற்றி கொண்டே இருந்தார்கள். ஆனாலும் இயேசுவை மறுதலிக்க மறுத்து மரித்தவர். (1628 ஜப்பான்)

**நிக்கொலோஸ்ரிம்லே** - இரும்புக்கம்பத்தில் கட்டிவைத்து உயிரோடு எரிக்கப்பட்டவர். (1555 - இங்கிலாந்து)

**ரிச்சர்ட் உம்ராண்ட** - ரோமானிய சிறையில் மொத்தத்தில் 14 ஆண்டுகள் இருந்தவர் (1940 - 1960)

ஜீவனின் பாதையில் இறுதி மூச்சுவரை செல்ல உன் வாலிபத்தை பெலப்படுத்துவாயா?

**சொல்வதை காதுள்ளவன் கேட்கக்கடவன்**

**வேதநாயகம் சுமணன்.**

## வினாவிடை 34 சரியான பதில்கள்

01. மதிகேடாய் நடக்கிற ஸ்திரி
02. பேதுரு
03. மீகாள்
04. செர்கியுபவுல்
05. இயேசுக்கிறிஸ்து
06. ரேகாப். பானா
07. நீதிமான்
08. இஸ்ரவேலர்
09. விவேகி
10. சூலமித்தி

# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி

### மனிதன் திறக்கக்கூடாதபடி அடைத்தது யார்

பிப்ரவரி மாதத்தின் மத்திய நாள்களில் ஹட்சனும் வில்லியம் பார்ன்ஸும் சாங்கைவந்தடைந்தனர். அன்று டாக்டர் மெட்கர்ஸ்டின் வார ஜெபக்கூட்டத்தில் மாலுமி ஒருவர் ஸ்வாட்லோ துறைமுகப் பகுதியைப்பற்றிக் கூறினார். அங்கு செல்லும் அனுமதியும் அந்நியநாட்டினருக்கு இல்லை. எனினும் அங்குள்ள கடத்தல்காரர்கள், மற்றுமுள்ளோரின் உதவியோடு அந்நியநாட்டினர் அங்கு சென்று வீடுகள் அமைத்து சுகபோக வாழ்வு நடத்திக்கொண்டிருப்பதையும் சொன்னார். அங்குள்ள ஒழுக்கங்கெட்ட நடத்தை மிகக் கொடியது. எவ்வளவோ அந்நியநாட்டினர் அங்கு இருந்தும் ஒரு மிஷனெரி கூட அப்பகுதியில் இல்லை. தங்களைத்தியாகம் செய்யும் மிஷனெரிகள் அங்கு சென்றால் எத்தனை நலமாயிருக்கும் என்று இப்பகுதியின் பரிதாப நிலையை எடுத்துரைத்தார்.

ஹட்சனின் மனதில் போராட்டம் தொடங்கியது. மனதுக்கு அமைதியே இல்லை. ஸ்வாட்டோவின் நினைவு அவர் உள்ளத்தை நிறைத்தது. ஸ்டோவுக்குச் செல்ல தீர்மானித்த அவர் வில்லியம் பார்னஸ்ஸைப் பிரியவேண்டுமே என்றெண்ணியபோது கவலையடைந்தார். எனினும் கர்த்தரின் பெலன் கொண்டு கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்ற தீர்மானித்தார்.

''நான் செல்லுவேன்
என் நண்பர்களையும் சோம்பலையும் விட்டிடுவேன்
சுற்றும் எல்லா கட்டுகளை அறுத்தெறிவேன்.
கசப்பேயானாலும் இன்பமேயானாலும்
தேவனே என்னைப் பரிசுத்தப்படுத்தும்
அப்போது நான் மேற்கொள்ளுவேன்''

என்று பாடி கவலையை மறந்தார். எதிர்பாரதவிதமாய் பார்ஸ்ஹும் ஹட்சனோடு செல்ல தீர்மானித்தார்.

சீனாவுக்கு ஹட்சன் வந்து சேர்ந்து இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

தொடரும்

# குறுக்கெழுத்துப் போட்டி - 33



**இடமிருந்து வலமாக**

1. புல்லை மேய்ந்த மன்னன்.
4. இந்தப் பிள்ளைகளை சங்காரத்தூதன் அடித்ததினால் செத்தார்கள்.
8. எமது சரீரம் தேவனுடைய .............. ஆகும்.
9. மோசே கு_ வாயை உடையவனாக இருந்தான்.
10. இயேசுவை அடக்கம் பண்ணிய கல்லறையில் இது புரட்டித் தள்ளப்பட்டிருந்தது.

**வலமிருந்து இடமாக.**

2. கண்ணீரின் தீர்க்கதரிசியின் ஒரு புத்தகம்.
3. சாராள் எனக்கு இது உண்டாகுமோ என்றாள்.
10. இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக் கொள்பவர்களை பிதாவானவர் ........... பிள்ளையாக ஏற்றுக்கொள்கிறார்.

**மேலிருந்து கீழாக**

3. மகாதிருக்குள்ளதும், கேடுள்ளதும்.
7. என்னுடைய ............... என்னுடையவர்.
10. ஒருவன் .............. ஜீவனை வெறுக்காவிட்டால் இயேசுவுக்கு சீஷனாக இருக்க முடியாது.

**கீழிருந்து மேலாக**

5. இயேசுவை உலகப்பிரகாரமாக இந்த தொழிலைச் செய்பவரின் மகன் என்றார்கள்.
6. காற்று பறக்கடிக்கும் பதரைப்போல அழிந்து போகிறவர்கள்.
8. 120 தொடக்கம் 134 வரையான சங்கீதங்கள் இந்த முறையில் பாடப்பட்ட சங்கீதங்களாகும். (குழம்பியுள்ளது).

**குறிப்பு :** குறுக்கெழுத்துப் போட்டி 32 இல் ஏற்பட்ட தவறை பொறுத்துக்கொள்ளவும்

# ஜெபவீடு, வல்லமையின்வீடு, துதியின்வீடு...

மத் 21:13: ஜெபவீடு

<u>என்னுடைய வீடு ஜெபவீடு என எழுதியிருக்கிறது. நீங்களோ அதை கள்வர் குகையாக்கினீர்கள</u>" என்றார். எங்களைப்பார்த்துத்தான் ஆண்டவர் கூறுகிறார். நீங்கள் என்ஜெபவீட்டை கள்வர் குனையாக்கினீர்கள். நாங்கள் ஜெபிக்கும் ஜெபங்களுக்கு ஏன் பதில்வரவில்லை. ஏன் எங்கள் ஜெபங்கள் கேட்கப்படவில்லை. நாம் உபவாசித்து ஜெபிக்கின்றோம். ஆர்வமுடன் ஜெபங்களில் கலந்து கொள்கின்றோமே ஆண்டவர் பதில் ஏன் தரவில்லை. ஆண்டவரின் கரம் குறுகிற்றோ. என்று கேட்கின்றோம். ஆண்டவர் கூறுகின்றார் நீங்கள் என் ஜெபவீட்டை கள்வர்குகையாக்கினீர்கள். குகையில் கூடாத காரியங்கள், பலவிதமான மிருகங்கள், அழுக்குள், பொல்லாத காரியங்கள் குகைக்குள் இருக்கும். இப்படியே நாம் ஜெபிக்கின்ற போது எம் குகைக்குள் இருக்கும். சிங்கம் வந்து பயப்படுத்தும், பாம்புவரும். குகை என்றால் இருள் பாவம் நிறைந்தது. இன்றைக்கு எமது ஜெபங்களுக்கு பதில் வராததன் காரணம் எமக்குள் பாவம் இருக்கின்றது. ஆனபடியால் ஜெபவீடு என எழுதியிருக்கும் எமது வாழ்வை கள்வர்குகையாக்கிவிட்டோம். பிரியமான வர்களே நம் ஜெபங்களுக்கு பதில் அவசியம் நம் ஜெபங்கள் தேவனுக்கு பிரியமாய் இருக்கின்றதா. எம் ஜெபத்தில் ஆண்டவர் வாஞ்சையாய் இருக்கின் றாரா? தேவன் கேட்கிறாரா? பிரியமானவர்களே நீங்கள் உங்கள் வாழ்வை ஆராய்ந்து பாருங்கள், நீங்கள் ஜெபிக்கும் போது சில தேவைகளை வைத்து ஜெபிப்பீர்கள். அவற்றிற்கு பதில்கள் கிடைக்காத போது அது ஆண்டவரின் பிழையோ போதகரின் பிழையோ இல்லை முதலாவது உங்கள் வாழ்வை ஆராய்ந்து பாருங்கள். கள்வர் குகையாக காணப்படுகிறது. நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும் போது எங்களை நாங்களே பரிசுத்தப்படுத்த வேண்டும். இருளிற்குள் இருப்பவைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். முதலாவது உமது வீட்டை பரிசுத்தமாக்க வேண்டும். கள்வர் குடியிருக்கும் இடமாக இருந்தால் பிரச்சினைகள் அதிகரிக்கும். காரணம் கள்வர் குகையாகிவிட்டது. எமது வாழ்வு தேவனுக்கு பிரியமாக இருந்தாலே ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும்.

**மத்தேயு 21:14 <u>வல்லமையின் வீடு</u>**

அப்போது குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திற்கு அவரிடத்திற்கு வந்தார்கள்; அவர்களை சொஸ்த மாக்கினார். அது ஒரு வல்லமையின் வீடாக மாறும், ஜெபவாழ்க்கை ஒரு வல்லமையின் வீடாக மாறும். பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டால் வல்லமையின் வீடாக மாறும். குருடர்கள் சப்பாணிகளை சொஸ்தமாக்கினார். ஜெபவீடு 2வது வல்லமையின் வீடாக மாறும்.வல்லமையின் வீடாக ஜெபிக்கும் போது தான் மாறும். நீங்கள்

ஜெபிக்கும் போது உங்கள் வியாதிகள் சொஸ்தமாகும். ஒவ்வொரு ஜெபத்திலும் ஆண்டவர் வல்லமையாய் கிரியை செய்வார்.

மத்தேயு 21:15-16 துதியின் வீடு
அவர் செய்த அதிசயங்களையும் ................

3வது துதியின் வீடு குழந்தைகளின் வாழ்க்கையிலும், பாலகரின் வாழ்க்கையிலும் ஆண்டவர் துதியுண்டாகச் செய்தார். துதியின் வீடாக மாறியதைக் காணலாம்.
அன்னாளுடைய வாழ்க்கையில் இம் 3 காரியங்களும் இருந்ததை காணமுடியும்.

1சாமுவேல் 1:7

அன்னாள் வருடம் தோறும் ஆலயத்திற்கு போவாள். அவளுடைய சக்களத்தி இவளை மனமடிவாக்குவாள். இவள் அழுதுகொண்டு சாப்பிடாது இருப்பாள். இது வருடம்தோறும் நடைபெறும். சிலவேளைகளில் அன்னாளுடைய வாழ்க்கை ஜெபவீடாக மாறாது இருந்திருக்கலாம், வருஷம் தோறும் ஆலயத்திற்குப் போவாள். அவளுடைய சக்களத்தி அவளை மனமடிவாக்கும் போது இவள் அழுது கொண்டே இருப்பாள்.

1 சாமு1:11 ஜெபவீடு

ஒவ்வொரு நாளும், வருஷம் தோறும் அன்னாள் பாதிக்கப்பட்டாள். இவள் ஆலயத்தில் போய் மனம் கசந்து அழுதாள் மனம்கசந்து அழுகிறவேளையிலே அவள் வீடு ஒரு ஜெபவீடாக மாறுகிறது. 11ம் வசனம் கூறுகிறது, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையை கொடுத்தால் அதை உமக்குத்தருவேன். என்று ஒரு பொருத்தனை பண்ணினாள். ஆண்டவரே நீர் கொடுத்தால் நான் உமக்குத் தருவேன். இன்று நாம் ஆண்டவரிடம் ஆண்டவரே நீர் தாரும் தாரும், என்னைப்பாரும் என்று எம்மைப்பற்றியே கூறுகின்றோம். ஆனால் அன்னாள் மனம் கசந்து அழுது ஒரு பொருத்தனை பண்ணுகின்றாள்; நீர் தாரும் நான் உமக்கத்தருகிறேன். ஜெபவீடு மற்றவர்களுக்கு கொடுக்கும் ஆண்டவருக்கு கொடுக்க வேண்டும். சில வேளை அன்னாளை அவளுடைய சக்களத்தி வேதனைப்படுத்தியதன் காரணம் அவள் ஜெபநேரத்தை அதிகரிப்பதற்காக இருக்கலாம். இதுவரையும் நீங்கள் ஜெபித்தும் பலனைக்காணாமல் இருக்கிறீர்களா? ஜெபவீடாக மாறாமல் கள்வர்குகையாக வைத்திருக்கிறீர்களா? இன்றும் பாவத்தை செய்து ஜெபத்தில் பங்கு கொள்ளுகிறீர்களா? பிரியமானவர்களே! பாவவாழ்க்கையை விட்டுவிட்டு மனம் கசந்துஅழுது மனம் மாறுங்கள். ஆண்டவரிடம் ஒரு பொருத்தனை செய்யுங்கள் அப்போது ஜெபவீடாக மாறும், அவ்வாறே அன்னாளின் வாழ்வும் மாறியது. அன்னாளின் வாழ்வில் வல்லமை நிகழ்கிறது.

1சாமு 1:20 ............ வல்லமையின் வீடு

சிலநாள் சென்ற பின் கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெற்று இதை நான் கர்த்தரிடத்தில் பெற்றேன் என்று சொல்லி சாமுவேல் என்று பெயரிட்டாள். வல்லமையின் வீடாக மாறியது. இருந்ததைப்பார்க்கிலும் பெரிதான ஆசீர்வாதத்ததைப் பெற்றாள். சாமுவேல் யார்? வல்லமையான தீர்க்கதரிசி. பெரிய காரியங்களை செய்தான். இதுதான் வல்லமையின் வீடு

நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற பதில் வந்துசேர வேண்டுமாயின் உங்கள் வாழ்க்கையில் மாற்றம் வேண்டும். அப்போது வல்லமையான

ஆசீர்வாதம் கிடைக்கும். அது உங்களை விட்டுப் போகாது. யாருமே அதை எடுக்க முடியாது. அன்னாள் காத்திருந்தாள் நிறைவான பதில் கிடைத்தது. பிரியமானவர்களே இதுவரை நீங்கள் காத்திருக்கிறீர்களா? திருமணமாகி குழந்தை இல்லலையா, வயது சென்று திருமணமாகவில்லையே, வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறீர்களா? தேவன் உங்கள் வாழ்க்கையிலே வல்லமையாய் கிரியை செய்வார். அன்னாளுக்கு வல்லமையின் ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். தேவன் தரும் போது இவ்விதமே தருவார். எங்களுடைய வாழ்க்கையில் சில காரியம் அடைபட்டிருக்கும் தேவன் அதை வல்லமையின் வீடாக்குவார். உங்கள் வாழ்வில் வியாதியாய் இருக்கலாம் பிரச்சியையாக இருக்கலாம், பிள்ளைகளால் கைவிடப்பட்டிருக் கலாம். கணவனால் கைவிடப்பட்டு இருக்கலாம். பிரியாமானவர்களே காத்திருங்கள் வல்லமையின் வீடாக மாறும்.

**1 சாமு 2:10 துதியின் வீடு**

3வது துதியின் வீடு. அன்னாள் ஒரு குழந்தையைத்தான் கேட்டாள் ஆண்டவர் அநேகம் பிள்ளைகளைக் கொடுத்தார். காரணம் 1சாமு 2:10 ..........துதித்தாள் அன்னாளின் வாழ்வு துதிவீடாக மாறியது. இவ்விதமான ஆசீர்வாதத்தைத்தான் தேவன் எங்களுக்கும் வைத்திருக்கிறார். நீங்கள் பயப்பட வேண்டாம். நீங்கள் கேளுங்கள் சோர்ந்து போக வேண்டாம். உங்களை அழைத்தவர் எப்படியும் உங்களை ஆசீர்வதிப்பார். தருவேன் என்றவர் நிச்சயம் தருவார். அன்னாளுக்கு திரளாய் கொடுத்தார். அன்னாளின் குடும்பத்தில் ஒரு ஆசீவாதம் அனைவருமே ஆசீர்வதிக்கப்பட்டனர். பிரியமானவர்களே உங்கள் வாழ்க்கையை இப்படியான ஜெபத்திற்கு மாற்றுங்கள். 1வது ஜெபவீடாக மாற்றினாள்; 2வது வல்லமையின் வீடாகியது. 3வது துதியின் வீடாகியது. இதைத்தான் மத்தேயு சுவிசேசத்தில் காண்கின்றோம். ஜெபவீட்டை கள்வர் குகையாக்கினீர்கள். இன்று எங்கள் வீட்டில் என்ன நடக்கிறது. எங்கள் வாழ்வில் என்ன நடக்கிறது? எங்கள் தனிப்பிட்ட ஜெபத்தில் கூட்டு ஜெபத்தில் ஆலய ஜெபத்தில் என்ன நடக்கிறது? எத்தனை பேருடைய வாழ்க்கையில் குகை இருக்கிறது. வெளியில் பார்க்க தெரியாது நல்லவர் கள் போல இருப்பார்கள் பாவம் எங்கள் வாழ்வில் இருக்கும் போது எப்படி கேட்டாலும் ஜெபித்தாலும் கேட்கப்பட மாட்டாது. முதலாவது உங்கள் வாழ்வை ஜெப வீடாக்குங்கள் ஜெபத்திற்கு பதிலை பெற்றுக் கொள்ளுங்கள். அது ஜெபவீடாக மாற வேண்டும் அப்போது கர்த்தர் பதிலைத் தருவார். ஆகவே ஜெபவீடாக மாறும் குகையில் என்ன பாவங்கள் உண்டு வேதாகமத்தை தூக்கி வந்து, ஆலயத்தில் ஜெபித்தும் துக்கத்தோடு வீட்டிற்கு போகின்றோம். வெளியான வாழ்க்கை வேறு, உள்ளான வாழ்க்கை வேறு. வெளியிலே வாழ்கின்ற வாழ்க்கை வாழ முடியாது கிறிஸ்துவுக்குள்.

வாழ்க்கையில் உண்மையாக உங்களை நினைத்துப் பாருங்கள் பாவம் என்கின்ற இருள் உங்கள் வாழ்க்கையில் இருக்கிறதா? தனிப்பட்ட ஜெபத்தையே குழப்பிக்கொண்டிருகின்றீர்களா? நீங்கள் தனியாக ஜெபிக்கும் போது பாருங்கள் சில வேளைகளில் இருள் இருந்தால் அது வெளியே வந்து எங்களை

மோசப்படுத்தும், குகைக்குள் சிங்கமிருந்தால் வெளியே வந்து கர்ச்சிக்கும், குகைக்குள் பாம்பு இருந்தால் வெளியே வந்து சீறும். இப்படிப்பட்ட காரியங் களை உள்ளே வைத்துக் கொண்டு எப்படி ஜெபிக்கப்போகின்றோம். எப்படி தேவனிடம் பெற்றுக்கொள்ளப்போகிறீர்கள். எனவே அன்னாளை உதாரணத் திற்கு நினைவு கூருவோம்.

1வது குகைக்குள் இருக்கும் பாவத்தைப் பாருங்கள் நம்முடைய உள் ளத்தை கள்வர் குகையாக மாற்றி விட்டு வந்து ஜெபித்தால் தேவன் கேட்க மாட்டார். நாங்கள் தான் கள்வர் குகையாக மாற்றுகின்றோம். நாங்கள் செய்யக்கூடாததை செய்கின்றோம். பார்க்கக் கூடாததை பார்க்கின்றோம். நிற்க கூடாத இடத்தில் நிற்கின்றோம். நாங்கள் இவ்விதம் கள்வர்களாக மாறினால் தேவன் பதில் தர மாட்டார். நாம் எப்போது எம்மை மாற்றுகின் றோமோ அப்போது தான் தேவன் பதில் தருவார். சந்திப்பார் அது எப்படிப்பட்ட தேவைகளாக இருந்தாலும் சரி தேவன் சந்திப்பார். உங்கள் ஜெபத்திற்கு பதில் உண்டு. அவ்ஜெபம் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கூப்பிடுகின்ற ஜெபம். உலகத்தை உண்டாக்கின தேவனை நோக்கி பார்க்கின்ற நாங்கள் தேவனுடைய பிள்ளைகள் அவர் நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட அவருடைய பிள்ளைகள் தேவனுடைய பிள்ளைகள் என்று சொன்னால் ஆசீர்வாதம் இருக்க வேண்டும். சில காலம் அன்னாள் வேதனையோடு இருந்தாள்; அவள் தன்னை ஆராய்ந்து பார்த்த போது அன்றைய தினம் மனம் கசந்து அழுத போது அன்றைக்கே அவளுடைய வாழ்க்கை மாறியது. இந்த ஆசீர்வாதம் உங்களுக்கு தேவையாக இருந்தால் நீங்களும் பயிற்சி செய்து பாருங்கள். ஆசீர்வாதத்திற்கு முதல் மாற்றம் வரவேண்டும். குகைக்குள் இருக்கும் தேவையற்ற காரியம் வெளியே வர வேண்டும். அப்போது உங்களை ஆசீர்வதிப்பார். அப்போது உண்மையாகவே உங்கள் மனைவி வீட்டோரங்களில் கனி தரும் கொடியைப் போலவும் பிள்ளைகள் ஒலிவ மர கன்றுகள் போலவும் இருப்பார்கள். சாபங்கள் வருவதன் காரணம் உங்கள் வாழ்க்கையை நீங்கள் மாற்ற வில்லை, அதை கள்வர் குகையாக் கியுள்ளீர்கள். ஜெபத்தினால் உங்கள் வாழ்க்கையை மாற்றுங்கள் அப்போது ஆசீர்வதிக்கப்படுவீர்கள். பாம்பை பார்த்தீர்களாக இருந்தால் செட்டையை கழற்றும் ஆயினும் விஷத்தை கக்காது. சில கிறிஸ்தவர்கள் பாம்மை போல தான். விஷத்தை கக்கி விட மாட்டார்கள் செட்டையை தான் கழற்றுவார்கள். இவ்விதம் வாழ முடியாது. ஆலயத்திலும் இவ்வாறு தான் செட்டையை கழற்றி விட்டு விஷத்துடன் வந்திருப்பார்கள். இன்றைய நாளிலும் நாம் விஷத்தை கக்க வேண்டும். இது தான் அன்னாள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம். நீங்கள் ஜெபவீடாக மாறுங்கள். அப்போது ஆசீர்வாதம் தங்கும். வேதம் சொல்கிறது ஜெபவீடு கள்வர் குகையாக மாறிபோயிற்று காரணம் ஒவ்வொரு பாவமாக செய்து செய்து குகை நிரம்பி விட்டது. அது எம்மை துதிக்கவும் விடாது, ஜெபிக்கவும் விடாது இப்படிப்பட்ட வாழ்ககை வாழ முடியாது. ஆண்டவரிடம் கேளுங்கள் அன்னாளைப் போல ஆண்டவர் மாற்றுவார் ஜெபவீடாவீர்கள். ஆண்டவரின் ஆசீர்வாதம் தங்கும் அது உங்களை விட்டு எடுபடாது.

போதகர்: அன்ரனி




## ஆவிக்குரிய போராட்டம் 01

**பிரசங்கி 3:1 – 8**

சாலொமோன் தன் ஞானத்தினால் வானத்தின் கீழ் இருக்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயம் உண்டு என்கிறான்.

28 தடவைகள் ''காலமுண்டு'' எனக்கூறியவன் இப்பட்டியலை ''யுத்தம் பண்ண ஒரு காலமுண்டு சமாதானம் பண்ண ஒரு காலமுண்டு'' என முடிக்கின்றான். தெய்வீக ஒழுங்கின் படியே இக்காலங்களும் நேரங்களும் வகுக்கப்பட்டுள்ளது. அந்த ஒழுங்கானது முதல் பிறப்பு பின் மரணம். பிறப்பில்லாமல் இறப்பு இல்லை. அதே போல் 8ம் வசனத்திலுள்ள ஒழுங்கும், முதல்யுத்தம் பின் சமாதானம். சாலொமோனுடைய ஆட்சிக் காலத்தில் சமாதானம் நிலவியது. ஆனால் 40 வருட ஆட்சியின் பின் சிலர் தீங்கு விளைவித்தார்கள். ஆனால் இவன் காலத்தில் பெரிய யுத்தங்கள் நடைபெறவில்லை. சாலொமோனின் இந்த ஆளுகை இயேசுவின் 1000 வருட ஆளுகையைக் குறிக்கிறது. அப்போது பூமியில் சமாதானம் விளங்கும். தாவீதின் காலத்தில் நிகழ்ந்த யுத்தங்களின் விளைவே சாலொமோனின் காலத்தில் உண்டான சமாதானம் ஆகும். எனவே சமாதானத்திற்கு ஒரு விலை இருக்கின்றது. இயேசு கிரயத்தைச் செலுத்தியதால் நாம் இன்று தேவனுடன் சமாதானம் பெற்றிருக் கின்றோம். இயேசு கல்வாரியிலே துரைத்தனங்கள், அதிகாரங்கள், அந்தகார லோகாதிபதிகள், மரணம் பாதாளம் ஆகிய சகலத்தையும் வென்றார். இதுவே நாம் தேவனுடன் சமாதானம் பெறக்காரணம். இதேபோல் நாம் முழு மனுக்குலத்திற்கும் சமாதானத்தை சம்பாதிக்க லாம். ஆவிக்குரிய போராட்டத்தின் மூலம்

1. அடிமைப்பட்டிருப்போர் சுதந்திரம் பெறலாம்.
2. ஒடுக்கப்படுவோர் விடுதலை பெறலாம்.
3. தொந்தரவுள்ளோர் இளைப்பாறுதல் அடையலாம்
4. வஞ்சிக்கப்பட்டோர் சத்தியத்தை அறியலாம்.
5. ஆபத்தில் உள்ளோர் காக்கப்படலாம்.

இது சமாதானத்தின் காலமல்ல போராட்டத்தின் காலம்.

நாம் அழைக்கப்பட்டதே

1. எம் எதிரியை எதிர் கொள்ள
2. நம்மைத் தியாகம் பண்ண
3. போராட
4. விடாமுயற்சி உள்ளவர்களாய் இருக்க
5. பாடுகள் அனுபவிக்க
6. மும்முரமான போராட்டத்திலே மரிப்பதனாலும் மரிக்கலாம்

இந்த போராட்டத்தின் விளைவாகவே அநேகர் சமாதானம் பெறுவர். இப் போராட்டத்தில் நாம் சோர்வடைந்தால் அது அதிக நாட்களிற்கு இல்லை என்பதை நினைத்துக் கொள்வோம். எல்லாம் சீக்கிரமாக முடிந்துவிடும் ஒரு நாள் வெற்றியின் கிரிடம் சூட்டப்படும். அது வரை சகலத்தையும் சகித்து இயேசுவின் நற்சேவகனாக போராடுவோம்.

**சேனையை உண்டு பண்ணுதல்**

தாவீது தன் 40 வருட ஆளுகையில் இராஜாக்களைக் முறிய அடித்து தேசங்களை ஜெயித்து இஸ்ரவேல் எல்லையை பெரிதாக்கினான். சாலொமோன் ராஜாவாக வந்த போது இஸ்ரவேலின் எல்லை எப்பிராத்து தொடங்கி எகிப்தின் நதி மட்டும் இருந்தது. தாவீது தன் வாழ்நாளில் செய்ததை வேறு எந்த இஸ்ரவேல் இராஜாக்களும் நிறைவேற்றவில்லை. தாவீதின் வெற்றியின் இலட்சியம் என்ன அவன் தனக்கென ஒரு நிரந்தரமான சேனையை எழுப்பக்கூடியதே ஆகும். ஆவிக்குரிய பிரகாரம் நாமும் தாவீதின் காலத்தில் தான் இருக்கின்றோம். நாம் மிகவும் உச்சக்கட்ட போராட்ட காலத்தில் இருக்கின்றோம். நாம் எதிரியை கொல்ல வேண்டும். எதிரிவசமுள்ளதை நாம் வசப்படுத்த வேண்டும்.நாம் எழுந்து பாதாளத்தின் சேனையை துரத்த வேண்டும்.

**1. நாளா 12:22**

தாவீதின் ஆளுகையின் ஆரம்பத்தில் 300,000 பேர் இருந்தனர். அவன் ஆளுகையின் முடிவில் 11 இலட்சம் பேர் இருந்தனர். இதை 40 வருடங்களில் பெருக் கினான். 1 நாளா 21:5 இவர்களில் 800,000 பேர் பராக்கிரம சாலிகள். தாவீது ஒரு தரமான சேனையை வைத்திருந்தான். இவன் சேனையின் மேன்மைக்கு 10 நல்ல தகைமைகள் இருந்தன.

**தாவீதின் சேனையின் தகமைகள்.**

1. சமநிலை (Balance) 1 நாளா 12:2 இங்கே பென்ஜமின் கோத்திரத்தார் இரு கைப்பழக்க முள்ளவர்கள். இதை போலவே நாமும் இருக்க வேண்டும். எம் வலது கை பலமுள்ளது. இடதுகை பல்வீனமானது. சமநிலை சபையின் இன்றைய முக்கிய தேவையாகும். செயற்பாடுகள் சம நிலையில் இருக்க வேண்டும். பயிற்சி சம நிலையில் இருக்க வேண்டும். ஜனங்கள் சமநிலையை ஏற்றுக் கொள்வார்கள்.

2. பயிற்சி (TRAINING)

தாவீதின் மக்கள் பயிற்சி பெற்றவர்கள் இவர்கள் எல்லா போராயுதங்களையும் கையாடுவார்கள்.

1 நாளா 12:33, 12:2, 12:8 இயேசு 12 பேரை பயிற்சிவிக்க மூன்று அரை வருடம் செலவிட்டார். என்றும் இல்லாதவாறு இன்று பயிற்சி பெற்ற மக்கள் தேவையாக இருக்கிறார்கள்.

3. தகுதி (Fitness ) 1. நாளா 12:8

இத்தகுதியை இவர்கள் பயிற்சியின் மூலமும் காத்துக் கொள்ளுதலின் மூலமும் அடைந்தார்கள். பயிற்சி எம்மை உயர்ந்த நிலைக்கு கொண்டு வரும். உயர்ந்த நிலையை அடைந்த நாம் அதை காத்துக் கொள்ளவும் வேண்டும். நாம் தளர்ச்சியடைந்து போனால் இத்தகுதியை இழப்போம். சேவைக்கு ஏற்ற தகமை தகுதி தான். அப் 6ல் பந்தி விசாரிப்புக்கு மனிதரை தெரிவு செய்த போது அப்போஸ்தலர், தகுதியிலுள்ள பொருத்தமுள்ள மக்களை தெரிவு செய்தனர். அந்தியோகியாவுக்கு மனிதர் அனுப்பப்பட இருந்த வேளையில் தெரிந்தெடுத்தவர்களை அனுப்பினர். சீலாவும் யூதாவும் இங்கே தகுதியுள்ளவர்களானார்கள்.

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர். ஜனபருபன்)**

தொடரும்

## வினாவிடை – 35

01. எங்கே மகா சந்தோசம் உண்டாயிருந்தது?
02. இளையவளை நேசித்த மணமகன் யார்?
03. வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் என்றது யார்?
04. யாருடைய வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று?
05. தன் முகம் பிரகாசித்திருப்பதை அறியாதிருந்தவர் யார்?
06. ஒரு நட்சத்திரம் யாக்கோபில் இருந்து உதிக்கும் என்று தீர்க்க தரிசனம் உரைத்தது யார்?
07. சூரியன் உதிக்கையில் இருண்டுபோகும் என்றது யார்?
08. யாருடைய சந்தோசம் ஒரு நிமிசம் மாத்திரம் நிற்கும்?
09. உனக்கு சந்தோசமும் மகிழ்ச்சியும் உண்டாகும் என்று யாருக்குச் சொல்லப்பட்டது.
10. யாருடைய் வீடு மேடாக்கப்படவுங் கடவது?

## வினாவிடை 34 சரியான பதில்கள் எழுதியவர்கள்

01. சி. ஜெபிற்றா - மயிலங்காடு.
02. லோ. பென்கனன் - நாவற்குழி.
03. லோ. நெகேமியா - நாவற்குழி.
04. றெ. மேரிகொன்சியா - திருநெல்வேலி.
05. S. மனோகரி - நீர்வேலி.

# மூவரி முத்துக்கள்

மறைவான உண்மைகள்
வெளியாகும்
தேவ சந்நிதியில்

யுத்தமில்லாத
சத்தமில்லாத ஆயுதம்
கண்ணீர்

உலகத்தில் இல்லாத
பரிசுத்தம்
உறைவது உண்மையில்

அழியாமல்
அழிவுக்குள் வாழ்வது
ஜெபம்

அழிக்கும் ஆயுதம்
நரம்பற்ற
நாக்கு

எண்ணெய் இல்லாமல்
எரிவது
எழுப்புதல்

சத்தமிடாத
சத்தியம்
ஜீவபலி

தேவனின் தோட்டத்தில்
ஓயாத விருப்பம்
தொழுகை

தொல்லைகள் யாவும்
மறைவில்
தேவனின் வேலையே

நிறமற்றது மணமற்றது
மெய்
பரிசுத்தமே

# உன்னை நீ நேசிப்பதை விட கர்த்தர் உன்னை அதிகம் நேசிக்கிறார்!

சங்கீதம் 57:2 **"எனக்காக யாவையும் செய்து முடிக்கப் போகின்ற உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்"** நாங்கள் எங்களுக்காக செய்யாத காரியங்களையும் தேவன் எங்களுக்காக செய்து முடிப்பார். அதனாலே தான் தேவன் எங்கள் பாவங்களைப் போக்கும்படியாக இந்த உலகத்திற்கு வந்தார். எங்களாலே எங்களுடைய பாவங்களை நிவர்த்தி செய்ய முடியாது. ஆனால் எங்களுடைய தேவன் எங்கள் பாவங்களை தன்னுடைய சிலுவை மரணம் மூலம் நிவர்த்தி செய்தார். இப்படியாக எங்கள் அன்றாட வாழ்க்கையில் நாங்கள் முகம் கொடுக்கின்ற ஒவ்வொரு காரியமும் தேவனே எங்களாலே முடியாது இனி நான் என்ன செய்ய வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருக்கின்ற தருணத்தில் தேவன் அதற்குரிய காரியத்தை தம் பிள்ளைகளுக்கு செய்து முடிப்பார். ஆகவே எங்களை நாங்கள் நேசிப்பதை விட தேவன் எங்களை அதிகமாக நேசிக்கிறார். எப்படியாக நாங்கள் எங்களை நேசிப்பதை விட தேவன் எங்களை நேசிக்க முடியும் என்பதை பார்ப்போம்.

சங்கீதம் 56:8 "என் அலைச்சல்களை தேவரீர் எண்ணி இருக்கிறீர் என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும், அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது" தேவன் எங்களுடைய அலைச்சல்களை எண்ணுகிறார். எங்களுடைய கண்ணீர்களை துருத்தியில் வைக்கிறார், எங்களுக்கு நேரிடுகிற எல்லாம் தேவனுடைய கணக்கில் இருக்கிறது. உண்மையுள்ள ஒவ்வொரு கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறவர்களுக்கும், பாவத்தை செய்யாமல் பாவத்தை வெறுப்பவர்களுக்கும், தேவனை மகிமைப்படுதும் படியாய் தங்களை காத்துக்கொள்ளுகிறவர்களுக்கும் இது பொருந்தும், ஆகவே நீங்கள் உண்மையாய் உங்களை தேவனுக்குள்ளாய் காத்துக் கொள்ள விரும்பினால்.... கர்த்தர்உங்களுக்கான காரியங்களை செய்வார்.

**1: சங்கீதம் 56:8 "என் அலைச்சல்களை தேவரீர் எண்ணி இருக்கிறீர்"** உங்களுடைய அலைச்சல்களை தேவன் எண்ணி இருக்கிறார். உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்ட பிற்பாடு எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருக்கலாம். ஆனால் அந்த பிரச்சினைகளை நீங்கள் எண்ணியிருப்பீர்களா? நிச்சயமாக நாங்கள் அவற்றை சரியாய் எண்ணியிருக்க மாட்டோம். சென்ற வாரமோ, கடந்த மாதமோ, கடந்த வருடமோ உங்களுக்கு வந்த அலைச்சல்களை மறந்திருக்கலாம், ஆனால் கர்த்தர் அதை மறப்பதில்லை, எங்கள் சார்பாக தேவன் அதை எண்ணிக் கொண்டு இருக்கிறார். நீங்கள் சில வேளைகளில் யோசிக்கலாம், என்னுடைய வாழ்க்கையில் இப்படி ஒரு காரியம் வந்து விட்டதா? இன்னும் எத்தனை காலத்திற்கு நான் இப்படி இருப்பது. என்னுடைய குடும்பத்திலே எத்தனை காலத்திற்கு

இந்த பாடு? ஆண்டவரே நான் என்ன செய்வேன்? ஒரு அலைச்சல் முடிய இன்னொரு அலைச்சல் வருகின்றது. நான் என்ன செய்வேன்? என்று சொல்லி ஏங்கி கொண்டு இருக்கலாம், உள்ளத்திலே உடைந்து போய் இருக்கலாம், பிரியமானவர்களே! உங்களுடைய அலைச்சல்களை ஆனந்தமாய் மாற்றுகின்ற கர்த்தர் உங்களுடைய அலைச்சலை எண்ணுகிறார். உங்களுடைய அலைச்சல் தேவனுக்கு தெரியும் எனவே நீங்கள் சோர்ந்து போக தேவையில்லை. உங்களுடைய பெலவீனம் தேவனுக்கு தெரியும், வியாதியிலே நீங்கள் படுகிற வேதனை தேவனுக்கு தெரியும். ஆண்டவர் அவற்றை எண்ணி கொண்டு இருக்கிறார். தாவீது இராஜாவினுடைய வாழ்க்கையிலே எத்தனை அலைச்சல், அலைச்சலுக்கு மேலே அலைச்சல், துன்பத்திற்கு மேலே துன்பம் ஆனால் அதன் சோர்ந்து போனானா? இடறி விழுந்தானா? கர்த்தரை மறந்தானா? இல்லை. ஏனென்றால் அவனுக்கு தெரியும் கர்த்தர் எனக்காக யாரையும் செய்து முடிப்பார். அவர் ஆராதித்த அந்த கர்த்தரே எங்களுடைய கர்த்தர், அந்த தேவனே எங்களுடைய தேவன். அவர் உங்களுக்காக யாவையும் செய்து முடிக்கிறவராய் இருக்கிற படியால், நீங்கள் சோர்ந்து போக தேவையில்லை. எங்களுடைய அலைச்சல்களை நாங்கள் எண்ணாத போது தேவன் அவற்றை எண்ணுகிறவராய் இருக்கிற படியால் அவர் எங்களை பார்க்கிலும் எங்கள் மேல் கரிசனையுள்ளவராய் இருக்கிறார்.

2: சங்கீதம் 56: 8 **“என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்....”** எங்களுடைய இதயம் உடைகிற சந்தர்ப்பங்களிலே எங்களுக்கு கண்ணீர் வரும். அனேக சம்பவங்கள், அனேக பிரச்சினைகளின் மத்தியில் நாங்கள் அழுதிருக்கலாம், தேவனுடைய சமூகத்திலே எங்களுடைய கண்ணீரை ஊற்றியிருக்கலாம். ஆனால் இந்த தாவீது இராஜாவுக்கு ஒரு தெளிவிருந்தது: ஆண்டவரே, என்னுடைய கண்ணீரை நீர் உம்முடைய துருத்தியில் வையும் என்றான். **எங்களுடைய கண்ணீரை நாங்களே சேர்த்து வைப்பதில்லை ஆனால் தேவன் தம்முடைய துருத்தியிலே சேர்த்து வைக்கிறார்.** இப்படிப்பட்ட தேவன் இருக்கும் போது நாங்கள் ஏன் சோர்ந்து போக வேண்டும்? ஏன் உடைந்து போக வேண்டும்? நீங்கள் விடுகின்ற கண்ணீருக்கான பதில் தேவனாலே ஏற்ற நேரத்தில் கொடுக்கப்படும். உடைந்த உள்ளம் உடையவர்களாய் தேவசமூகத்துக்குப் போய் வெற்றி பெற வேண்டும். தங்களுடைய உள்ளம் உடைந்து கண்ணீர் வந்து, தேவசமூகத்தில் அதை ஊற்றி அந்த கண்ணீருக்கான பதிலைப் பெற்று ஆறுதல் அடைந்த சிலர் வேதாகமத்தில் இருக்கிறார்கள். அவர்களில் பதர்த்தால்.....

(1 சாமுவேல் 1:10 – 15) இங்கே அன்னாளை குறித்ததான சம்பவம் ஒன்று. இந்த அன்னாளுடைய வாழ்க்கையிலே அவளுக்கொரு வேதனை; அவளுக்கு பிள்ளைகள் இல்லை, அவள் தன்னுடைய வேதனை, துக்கத்தை, தேவசமூகத்திலே மனம் கசந்து மிகவும் அழுது தேவனுக்கு தெரியப்படுத்துகிறாள். இது போன்று உங்களுடைய வாழ்க்கையிலும் அநேக வேதனைகள், பிரச்சினைகள், ஏற்பட்டிருந்தால் நீங்கள் செய்ய

வேண்டியது உடைந்த இதயத்தோடு தேவனுக்கு அதை தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால் தேவன் கண்ணீர்களைக் துருத்தியிலே சேர்க்கிறவர்.

**அன்னாள்கனம்கொடுத்துப்பேசினாள்;**

அவள் தேவசமூகத்திலே வெகு நேரம் விண்ணப்பம் பண்ணினாள், அவளுடைய உதடு மட்டும் அசைந்தது. அவ்வளவாக அவளுடைய இருதயம் உடைந்திருந்தது. அவள் உடைந்து போய் தேவ சமூகத்திலே தன்னுடைய கண்ணீரை ஊற்றினாள். அந்த நேரத்திலே ஒரு சம்பவம் நடந்தது. அங்கு இருந்த ஆசாரியனாகிய ஏலி அன்னாளைபார்த்து நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய் என்பதாகச் சொன்னான், ஆனால் அன்னாள் சொன்ன அந்தப்பதில் தான் ஆண்டவரிடமாய் எல்லாவற்றையும் ஒப்புக் கொடுக்கிற உடைந்த இருதயம் உடைய பெண்ணிடம் இருந்து வந்த வார்த்தை "அப்படியல்ல என்ஆண்டவனே"..... ஏலி தவறாய் கூறி இருந்தாலும் தேவசமூகத்திலே இருந்து ஜெபிக்கிற பெண்ணுடைய வார்த்தை இவ்விதமாய் இருந்தது. **உண்மையில் உடைந்த இருதயம் உள்ளவர்கள் மற்றவர்களுக்கு கனம் கொடுத்துப் பேசுவார்கள்.** மற்றவர்கள் தவறாக எண்ணியிருந்தாலும் நாங்கள் கனம் கொடுத்துப் பேசுவோம். இப்படிப்பட்டவர்களுடைய கண்ணீருக்கு நிச்சயமாகப் பதில் உண்டு. இங்கு ஏலி பாவித்ததான இந்த வார்த்தையானது, உன் குடியை உன்னை விட்டு விலக்கு...... மிகவும் கடினமான ஒரு வார்த்தையாகும். ஆனால் அவளுடைய வார்த்தை தேவனுக்கு பிரியமாய் இருந்தது என்பதையும் காண்பிக்கிறது. மற்றவர்கள் உங்களை தவறாக புரிந்து கொண்டு தவறான வார்த்தைகளை பேசியிருக்கலாம், இவ்விதமான வேளைகளில் எங்கள் செயற்பாடுகள் தேவனுக்கு ஏற்றதாய் காணப்படுகிறதா? எங்களுடைய மாறுத்தரத்தினால் அவர்களுக்கு எதிர் பேசுகிறோமா? அல்லது அன்னாளைப் போன்று தேவனுக்கு பிரியமான பதிலை கூறுகின்றோமா? இதன் பிற்பாடு அன்னாள் துக்க முகமாய் இருக்கவிஇல்லை. அவளுக்குத் தெரியும் நான் தேவனுடைய பாதத்திலே என் கண்ணீரை ஊற்றி விட்டேன் அவர் என் கண்ணீரை கண்டார். அவர் துருத்தியிலே அவற்றை சேர்த்திருக்கிறார் அதற்குரிய பதிலை அவர் எனக்கு தருவார். எனவே அவள் துக்கமுகமாய் இருக்கவில்லை, நீங்கள் உண்மையாய் தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்து உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையின் நடையைக்காத்து, உங்களுடைய வாழ்வில் இருதயம் உடைகிற சம்பவம் நடந்தால், அதை நீங்கள் சரியாய் எதிர் கொண்டால் அது உங்கள் பரிசுத்தத்தை பாதிக்காத வகையில் பயன்படுத்தினால், நிச்சயம் உங்கள் கண்ணீருக்கு பதிலுண்டு. அன்னாள் இவ்விதமாக செயற்பட்டு விட்ட கண்ணீருக்கு பதிலாக சாமுவேல் பிறந்தான். அதற்கு பிற்பாடு அவள் ஐந்து பிள்ளைகளை பெற்றாள். அவள் அன்று ஏலி கூறிய அந்த கடினமான வார்த்தைக்கு எதிர் பேசியிருந்தால் சாமுவேலை பெற்றிருப்பாளோ தெரியாது. நீங்கள் தேவனுக்கு பிரியமாய் நடந்து, விடு்கின்ற கண்ணீருக்கு தேவன் பன்மடங்கு பலன் கொடுப்பார். நீங்கள் எந்தக் காரியங்களைக் குறித்து கலங்கி கண்ணீர் விடுகிறீர்களோ அந்த காரியங்களை தேவன் முற்றிலும் மாற்றிப் போடுவார்.

2. ராஜாக்கள் 19:14,15 இங்கே ஒரு சம்பவம் நடக்கின்றது. அசீரிய சேனை யூதாவுக்கு விரோதமாக வருகின்றது. யூதாவுக்கு விரோதமாய் வருகின்ற போது அசீரிய ராஜா சனகெரிப் ஸ்தானாதிபதிகளை அனுப்பி நீங்கள் நம்பி இருக்கிற ராஜா, கர்த்தர் உங்களை விடுவிப்பார் என்று சொல்லுவான்; நம்பவேண்டாம். மற்ற தேசங்களை நான் எப்படி மேற்கொண்டேனோ? அதே போல் யூதாதேசத்தையும் நான் மேற்கொள்வேன். மற்றதேசத்தின் தேவர்கள் எப்படி என்னிடத்திலிருந்து தன்னுடைய மக்களை காக்கமுடியாமல் போனார்களோ, அப்படி இந்த எசேக்கியா ராஜா கூறுகின்ற கர்த்தரும் என்னிடத்தில் இருந்து உங்களை காப்பாற்ற முடியாது. இவ்விதம் ஒரு செய்தியை அனுப்புகிறான். இதை எசேக்கியா ராஜாவுக்கு அனுப்பிய போது அந்த பத்திரத்தை வாங்கினான். வாங்கிய பிற்பாடு முதலாவதாக செய்த காரியம் அவன் கர்த்தரின் ஆலயத்துக்குப் போய் அதை கர்த்தருக்கு முன்பாக விரித்து அதை தேவனுக்கு காண்பித்தான். நாங்கள் எசேக்கியாவை பார்க்கும் போது அவன் ஒரு உடைந்த இருதயம் உள்ளவன். ஒரு தடவை எசாயா தீர்க்கதரிசி வந்து சொன்னான், நீ உம்முடைய வீட்டுக் காரயங்களை ஒழுங்கு படுத்தும் நீ மரிக்கப் போகிறீர், எசேக்கியா உடனே, அழுதான். முற்றத்துக்கு போன எசாயா தீர்க்கதரிசி உடனே வந்து, உன்விண்ணப்பத்தைக் கேட்டேன் உன் கண்ணீரைக் கண்டேன்... என்று கர்த்தர் சொல்லுகிறார். உனக்கு இன்னும் பதினைந்து வருசம் கூட்டித்தந்திருக்கிறார் என்றான். கர்த்தாவே, கர்த்தாவே என்று அழுகிறிர்களா? கர்த்தர் உங்களை ஆசீர் வதிக்க விரும்புகிறார். கர்த்தர் உங்கள்காரியங்களை மாற்றியமைக்க விரும்புகிறார், இன்னும் அதிகமாக நன்மை செய்ய விரும்புகிறார். எசேக்கியா தேவ சமூகம் சென்று தேவனே பாரும் என்று சொன்னான். பிரயமானவர்களே உடைந்த இருதயமுள்ளவர்கள் எல்லாவற்றையும் தேவனுக்கு தான் சொல்லுவார்கள். ஏனென்றால் தேவன் தான் இதற்கு பதில் தரக்கூடியவர் என்று அவர்களுக்கு தெரியும். கர்த்தர் அதைப் பார்த்தார் அந்த அசீரியப்படை யூதா தேசத்துக்குள் வரவேயில்லை தேவன் அற்புதம் செய்தார். அற்புதம் செய்கிற தேவனிடத்தில் உங்கள் கண்ணீரை ஊற்றுங்கள். அதற்கு பெறுமதி உண்டு. உங்கள் கண்ணீரின் பெறுமதி கர்த்தருக்குத் தெரியும். அன்னாளுக்கு, எசேக்கியாவுக்கு, தாவீதுக்கு, கண்ணீரைக்கண்டு பதில் கொடுத்த தேவன் உங்கள் கண்ணீருக்கும் பதில் தருவார்.

3. சங்கீதம் 56:8 " அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது" இங்கே நாங்கள் எல்லோரும் இந்த விடயத்தில் மிக கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் எங்களுக்கு நேரிடுகின்ற எல்லாவற்றையும் தேவன் தன்னுடைய கணக்கிலே வைக்கிறார். தேவனுடைய கணக்கிலே இவைகள் இருக்கிற படியால் எங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் எல்லா மாறுத்தரங்களும், செயல்களும் தேவனுக்கு பிரியமானதாய் இருக்க வேண்டும். இல்லை என்று சொன்னால் தேவனுடைய கணக்கிலே இவை இருக்க முடியாது. உதாரணமாக, தாவீது ராஜா சங்கீதம் 38:12,13 செவிடனைப் போல கேளாதவனாகவும், ஊமையனைப் போல் வாய் திறவாதவனாகவும்

இருந்தான். தேவனுடைய கணக்கிலே வைக்கப்பட வேண்டுமானால் இந்த வார்த்தையில் கூறப்படுகின்ற இந்த தகைமைகள் வரவேண்டும். இந்த தாவீதுக்குச் சவுலைக் கொல்வதற்குரிய அனேகசந்தர்ப்பங்கள் கிடைத்தது, ஆனால் சவுல் மீது தாவீது கை போடவில்லை, ஏனென்றால் அவன், தேவனே இது உம்முடைய கரத்தில் அல்லவோ இருக்கிறது என்பதை அறிந்திருந்தான். தேவனுடைய கரத்தில் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கும் படியாய் அவனுக்கு இருந்த பொறுமை என்னத்தைக் காண்பிக்கிறது என்றால், நான் அவசரப்பட்டு இந்தக்காரியத்தை செய்வதினாலே தேவனை விட அது தன்னை உயர்த்துவதாகச் காணப்படும். தேவனுக்கு மகிமையைக் கொடுக்காது. மாறாக தேவன் தான் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார், என்பதை நன்கு அறிந்திருந்தார், தாவீது கர்த்தருக்காக விட்டுக் கொடுத்தான். நாங்கள் எங்கள் வாழ்வில் பொறுமையை கடைப்பிடித்தால் ஆண்டவரே நீர் எனக்காக பேசும், எனக்காக யுத்தம் செய்யும். என்னுடைய காரியத்தை நீர் பாரும், நான் அல்ல நீர் தான் என்னை விட அதிகமாக நன்மை செய்யக் கூடியவர். இப்படிப்பட்ட மனநிலை எங்களுக்கு வருகிறது. உங்களுடைய வாழ்க்கையில் எது தாக்கம், எது துன்பம், எது துயரம் அப்போதெல்லாம் நீங்கள் பொறுமையாய் சகித்து, சகித்து இருந்தால் தேவனுக்கு இடம் கொடுக்கிறீர்கள். ஒரு தேவ ஊழியன் ஓரிடத்தில் அருமையாக ஊழியம் செய்து கொண்டு வந்தார். இவருடைய ஊழியத்தில் பொறாமை கொண்ட சிலர் ஒரு நடத்தை சரியில்லாத பெண்ணை அனுப்பி அவளுடைய கரத்தில் ஒரு குழந்தையை கொடுத்து ஆராதனை நடக்கிற இடத்திற்கு சென்று "உம்முடைய பிள்ளையைப் பிடியும்" என்று சொல்லும் படி அனுப்பினார்கள். இந்த பெண்ணும் அப்படியே சென்று, ஆராதனை நடந்து கொண்டு இருக்கும் போது அப்படியே செய்தாள். அப்பொழுது அந்த ஊழியக்காரன் பிரசங்க பீடத்தை விட்டு இறங்கி வந்து அந்த குழந்தையை வாங்கி கொண்டு; பட்டணத்தை விட்டு தொலைவில் உள்ள ஒரு கிராமத்திற்கு சென்று இந்த குழந்தையோடு வாழ்ந்து வந்தார். ஒரு வார்த்தையும் திருப்பி கதைக்க வில்லை; அவருக்கு வேதனை, கண்ணீர், நிந்தை இந்தப் பாடுகளோடு சென்று அமைதியாக ஒரு ஒதுக்குப் புறத்திலே வாழ்ந்தார். சில காலங்களின் பிற்பாடு இவ்விதம் பொய் சொன்ன இப்பெண்மணி மாற்ற முடியாத வியாதியையுடைய ஒரு பெண்ணாக ஒரு கூட்டத்திற்கு சென்றார். அக்கூட்டத்தில் ஊழியக்காரனுக்கு முன்பதாக ஜெபிப்பதற்கு நின்ற போது அவர் ஜெபிக்கும் போது சொன்னார் இப்படி, இப்படி, இப்படி எல்லாம் பொய் சொன்னாயா ஊழியக்காரனைப் பற்றி சொன்னாயா? அவள் அழுது கொண்டு சொன்னாளாம் நான் பொய் சொன்னேன், அந்த நீதிமானை பொய்யாய்க் குற்றப்படுத்தினேன் என்றாளாம். அவ் ஊழியக்காரன் கூறினார் நீர் செய்த எல்லாக் காரியங்களையும் அறிக்கை செய்ய வேண்டும் என்றார். அடுத்த ஆராதனை நாள் வந்தது அங்கு சென்று அவ்வளவு மக்களுக்கு முன்பதாக சொன்னாளாம், நான் சொன்னது பொய், அவர் நீதிமான் அவர் அப்படி தவறு விடவில்லை. தன்னை அப்படிச் சொல்லப் பண்ணினவர்கள் இவர்கள் தான் என்பதாக கூறினாளாம். நடந்தது என்ன வென்றால் மறுபடியும் அச்சபை மக்கள் சென்று தூர

இடத்தில் இருந்த தங்கள் போதகரை அழைத்து வந்தார்கள். நீங்கள் தான் எங்களுடைய போதகர், உண்மையான பரிசுத்தவான் என்று சொன்னார்கள். மறுபடியும் தேவன் அவரை அதே இடத்தில் அதே ஸ்தானத்தில் உயர்த்தினார். ஆம்! அவர் எதுவுமே பேசவில்லை அமைதியாக போனார். அவருடைய கண்ணீரை தேவன் கண்டார். அவருடைய அலைச்சலை தேவன் கண்டார். அது தேவனுடைய கணக்கிலே இருந்தது. தேவன் அதற்கு பதில் கொடுத்தார். அவர் மறுபடியும் தன்னுடைய சபையிலே வந்து நின்றார். அன்றைக்குத் தனக்காகத் தான் பேசியிருந்தால் தேவன் கொண்டு வந்த பதிலை விட குறைவாக நன்மை கிடைத்திருக்கும். ஆனால் தேவனுக்கு இடம் கொடுத்து, அமைதியாக இருந்தார். தேவன் அவருக்காக வழக்காடி யுத்தம் செய்தார். ஆண்டவர் உண்மையை நிரூபித்தார். உங்களுக்கு வருகிற நிந்தை, துன்பம், துயரம் எல்லாவற்றையும் ஆண்டவருடைய பாதத்தில் வையுங்கள். அப்போது உங்களுக்கு எல்லாம் அவருடைய கணக்கில் இருக்கும். அதன் மூலம் நன்மையை பெற்றுக் கொள்ளலாம் .தேவன் நன்மையை தரும் வரைக்கும் உங்களுடைய பொறுமையை காத்துக்கொள்ளுங்கள். இன்று நீங்கள் அழுது கொண்டு இருக்கலாம். தேவன் உங்களுக்குப் பதில் தருவார். இப்போதும் அலைச்சலா? ஆண்டவரை நம்பி இருங்கள் எல்லாம் அவருடைய கணக்கில் இருக்கிறது. கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் அற்புதம் செய்வார். சோர்ந்து போக வேண்டாம், துயரம் அடைய வேண்டாம் .எங்களுக்காக எல்லாவற்றையும் செய்து முடிக்கும் கர்த்தர் எங்களோடு இருக்கிறார்.

*போதகர் வேதநாயகம் மகாராஜா*

## குறுக்கெழுத்துப் போட்டி 32 சரியான விடைகள்

**இடமிருந்து வலமாக**

01. சாலொமோனின் ஆலயம்
03. சேவல்
05. ஏ(எ) னோக்கு

**வலமிருந்து இடமாக**

06. சுமை
07. விரல்கள்
08. பசியாய்

**மேலிருந்து கீழாக**

02. மோசே
04. ஆலயம்
03. சேக்கல்

**கீழிருந்து மேலாக**

05. எலிசா
07. விதை
08. பரிசுத்தம்
09. களை

**குறிப்பு**: கீழிருந்து மேலாக வரவேண்டிய 8வது கேள்வி தவறுதலாக சேர்க்கப்படாமல் போய்விட்டது. அந்தக் கேள்வி, இது இல்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்க முடியாது

## சந்தா விபரம்

இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

### சந்தா விபரம், (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L. Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L. Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L. Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L. Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்.

குறிப்பு : தற்போது ஏற்பட்டுள்ள கடதாசியின் விலையேற்றம், தபால் செலவு அதிகரிப்பு என்பவைகள் காரணமாக சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி.

- ஆசிரியர் -

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்.

### சந்தா கூப்பன்

பெயர் : ____________________

விலாசம் : ____________________

____________________

____________________

____________________

தயவுசெய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

Gospel works

Drs. Joshay.g







**To.**

MISS.MATHANA GNANACHANDRAN
MADATHTHADI
ALVAAI EAST
ALVAAI

**Zion Church Office**
**No. 347. Navalar Road,**
**Jaffna, Sri Lanka.**

*St. Joseph's Catholic Press, 360. Main Street,*
*Jaffna, Sri Lanka. T. P. 021-222 2378*